# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.91/2021

வாதிகள் தரப்பு 2 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் வா.சா.–2 | | |
| த/பெ. | அழகர்சாமி | | |
| கிராமம் | | தொழில் | கிராம நிர்வாக அலுவலர் |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 56 |

---

முதல் விசாரணை 25–06–2026.

நான் சவ்வாஸ்புரம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சிய அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்கிறேன். சாட்சிய அழைப்பாணையில் கூறியுள்ள ஆவணங்களின் அசல் மற்றும் சான்றிட்ட நகலை கொண்டு வந்துள்ளேன்.

1) நீதிமன்ற அழைப்பாணை சார்பு நகல் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) என் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) புல எண்.48ன் புல வரைபடம் (பதிவேடு) உண்மை நகல் சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) புல எண்.48ன் இணையதள புல வரைபடம் உண்மை நகல் சா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) புல எண்.48/6, 48/7 பல உட்பிரிவுகளாக உள்ளது அதன் அடங்கல் பதிவேடு உண்மை நகல் (4 பக்கங்கள்) சா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) புல எண்.48/6, 48/7 ல் உட்பிரிவுகள் சிட்டா உண்மை நகல் (12 பக்கங்கள்) சா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

புல எண்.48/6 க்கும் வடக்கே ரோடு உள்ளதா என்றால் சர்வே எண்.47 புஞ்சையாக உள்ளது. சர்வே எண்.48/6 க்கு தெற்கே ரோடு உள்ளதா என்றால் ஆமாம். தெற்கே உள்ள ரோடு சிறிது தூரம் சென்று குறுக்காக வடக்கு நோக்கி செல்கிறது. சர்வே எண்.48/5 ல் ரோடு உள்ளது. சர்வே எண்.48/7 க்கு வடக்கே புஞ்சை இடம் உள்ளது. சர்வே எண்.48/6, 48/7 க்கு செல்பவர்கள் சர்வே எண்.48/5 ன் வழியாகத்தான் செல்ல முடியும், வெளியே வரமுடியும் என்றால் சரிதான். வேறு வழிகிடையாது என்றால் சரிதான்.

8 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.06.25 18:32:02 +0530